## தலைப்பு 12 – தேசிய கல்வி ஆணைக்குழு

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய கல்வி ஆணைக்குழுவின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன்கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் தேசிய கல்வி ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 மே 29 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் தேசிய கல்வி ஆணைக்குழுவிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 நவம்பர் 20 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட இந் நிதிக்கூற்றுக்கள் தேசிய கல்வி ஆணைக்குழுவின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில்

உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்த அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின்போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு ஆணைக்குழுவின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதை மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுரை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | ஆணைக்குழுவின் கருத்துரைகள் |
|---|---|---|
| 2018 இலக்கம் 19 கொண்ட தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆவது பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய தேசிய கல்வி ஆணைக்குழுவின் கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுரைப்படுத்த வேண்டி உள்ளதுடன் அம்முறைமையின் பயன்மிகு தன்மையினை தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வு | 2018 இலக்கம் 19 கொண்ட தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆவது பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | பயன்மிகு உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணப்படுவதற்காக தலைவரினால் மாதாந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் நடாத்தப்பட்டது. அதில் பெற்றுக் கொள்ளப்பட்ட தீர்மானங்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினை அறிமுகப்படுத்துவதற்கான நடவடிக்கை |

| | |
|---|---|
| மேற்கொள்ளப்பட்டு அதன்படி முறைமையினை பயனுள்ள வகையில் மேற்கொண்டு செல்வதற்கு தேவையான மாற்றங்களை மேற்கொள்ளப்பட வேண்டி உள்ளதாகவும் அம்மீளாய்வுகளினை எழுத்து மூலமாக மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்றினை கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும், அவ்வாறானதொரு மீளாய்வினை மேற்கொண்டதற்கான கூற்றினை கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டு இருக்கவில்லை. | மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. ஆகையால், 2020 ஆம் வருடம் தொடக்கம் இது சம்பந்தமாக கவனத்தினை மேற்கொண்டு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். |

## 1.6.2 சட்டம், ஒழுங்கு, மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

கீழ்க்காணும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டம், ஒழுங்கு, பிரமாணம் ஆகியவற்றிற்கான கவனத்திற்கு | இணங்காமை | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1991 இலக்கம் 19 கொண்ட தேசிய கல்வி ஆணைக்குழுவின் அதிகாரச் சட்டம் | | | |
| (i) | 3(2) பிரிவு | ஆணைக்குழு தொடர்ந்து இயங்கும் சபையாக பிரகடனப்படுத்தப்பட்டிருந்த போதிலும், செலவினங்களுக்கான ஒதுக்கீடு ஒதுக்கப்படுதல் மற்றும் விடுமுறை, செலவினங்கள் மேற்கொள்ளல் மற்றும் புகையிரத பயணச் சீட்டு வழங்கல் ஆகியபிரமாணங்கள் அரச திணைக்கள இயல்பினை ஒத்ததாக இருந்தன. | அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் செயல்பட வேண்டியமை | திறைசேரி தேசிய கல்வி ஆணைக்குழுவின் கணக்கீடு செயற்பாடுகள் தொடர்பாக 1991 வருடம் முதல் B தரத்திலான திணைக்களமாகவும், 2017 நவம்பர் 14 ஆந் திகதி முதல் A தரத்திலான திணைக்களமாகவும் கவனத்திற் கொண்டு செயல்படுகின்றது. |
| (ii) | 10(1)(ஊ) பிரிவு | அதிகாரச்சட்டத்தின் பிரமாணங்களின் பிரகாரம் | அதிகாரச் சட்டத்தின் | இணங்குகின்றேன். 2020-2025 ஆண்டிற்கான |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தரவு வங்கியொன்றினை தாபிப்பதற்கு மீளாய்வு ஆண்டு வரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பிரகாரம் செயற்பட வேண்டியமை. | ஐந்தாண்டு வருடத்தினுள் சேர்க்கப்பட்டுள்ளன. |
| (iii) | 20 ஆவது பிரிவு | ஆணைக்குழுவின் பரிந்துரைகள் சேர்க்கப்பட்ட அறிக்கையினை வருடாந்தம் சனாதிபதியிடம் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டியமை. | அதிகாரச் சட்டத்தின் 20 ஆவது பிரிவின் படி அறிக்கையினை அதிகரிப்பதற்கு சனாதிபதியிடம் சமர்ப்பிப்பதற்கு இதுவரை நடவடிக்கை மேற்கொள்ளப்படாததுடன் எதிர்காலத்தில் அதற்கான நடவடிக்கை மேற்கொள்வேன். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை நிதிப்பிரமாணம் 756 | மீளாய்வு ஆண்டு இறுதியில் ரூபா 44,974,918 க்கான சொத்துக்கள் தொடர்பாக ஆய்வொன்றினை மேற்கொள்ளப்பட்டு சம்பந்தப்பட்ட அறிக்கையினை 2020 செப்தெம்பர் 23 ஆந் திகதியில் உள்ளவாறான கணக்காய்வு தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப் பிரமாணங்களுக்கு அமைய செயற்பட வேண்டியமை. | பொருட் கணிப்பினை முடிக்கப்பட்டுள்ளது. கொவிட் 19 தொற்று காரணமாக விளைவற்ற சொத்துக்களை கழித்தொதுக்கும் நடவடிக்கையினை மேற்கொள்ளப்பட முடியாது இருந்தது. அது சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 50(ii) மற்றும் (iii) பந்தியின் படி சரியானதாகவும் சிக்கனமாகவும் மதிப்பீட்டினை தயாரிக்காமையினால் | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செயல்பட வேண்டியமை. | நிதியினை சிக்கனமாகச் செலவ்ு செய்வது தொடர்பாக 2019 வருடத்தினுள் வெளியிடப்பட்ட வரவு செலவு சுற்றறிக்கை ஆலோசனைக்கமைய சகல செலவினங்களையும் |

| | | | |
|---|---|---|---|
| | மொத்த மதிப்பீட்டில் ரூபா 5,385,382 க்கான ஒதுக்கீடு சேமிக்கப்பட்டிருந்தமை அவதானிக்க கூடியதாக இருந்தது. | | கட்டுப்பாட்டுடன் செய்தமை , ஆரம்பிக்கப்பட்டிராத பெறுகை செயற்பாடுகளை ஆலோசனைப் படி செயற்படுத்தாமை, முன்பள்ளிகூட கல்வி மற்றும் பாடசாலையினை அடிப்படையாகக் கொண்ட தொழிற்துறை வழிகாட்டலுக்கான தேசிய கொள்கையினை தயாரிப்பதற்காக யுனிசெப் நிறுவனம் மற்றும் பிரித்தானியா கவுன்சிலினால் வழங்கப்பட்ட அனுசரனையுடனான பங்களிப்புக் காரணமாக அதற்காக செலவிடப்பட இருந்த நிதி சேமிக்கப்பட்டமை இதற்கான காரணமாகும். |
| (ஆ) | இரண்டு மூலதன விடயங்களுக்கான கட்டாய சேமிப்பினை விஞ்சி முறையே ரூபா 25,775 மற்றும் ரூபா 86,658 செலவிடப்பட்டிருந்தன. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டியமை. | - மேற்படி - |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் இணக்கப்பாடுகளை மேற்கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மூன்று மீண்டெழும் விடயங்கள் தொடர்பான தேறிய ஒதுக்கீட்டினை கடந்த உடன்பாடு காணப்பட்டிருந்த பொறுப்புக்களின் பெறுமானம் ரூபா 770,404 இருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டியமை. | தேசிய கல்வி ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ கடமைகளுக்காக கனிஷ்ட பணிக் குழுமத்திற்கு மேற்கொள்ளப்பட்ட மேலதிக நேர கொடுப்பனவுக்காக திறைசேரி அனுமதியுடன் பெற்றுக் கொள்ளப்பட்ட ஒதக்கீட்டினை பயன்படுத்தப்பட்டது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நோக்கு மற்றும் பணி

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆணைக்குழுவினால் 1992 ஆம் வருடம் முன்வைக்கப்பட்ட கல்விக் கொள்கைக்கான பிரேரணை அடிப்படையாகக் கொண்டு 1997 வருடம் சனாதிபதியினால் கல்விக் கொள்கையினை பிரகடனப் படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அதன் பின்னர் முன்வைக்கப்பட்ட கல்விக் கொள்கைக்கான பிரேரணைகளை கொள்கை ரீதியான பிரகடனப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அதிகார சட்டத்தின் 2(1) மற்றும் 2(3) ஆகிய பிரிவுகளின் பிரகாரம் செயற்பட வேண்டியமை. | 1991 இலக்கம் 19 கொண்ட தேசிய கல்வி ஆணைக்குழுவின் அதிகாரச் சட்டத்தின் 2(1) பிரிவின் படி கல்விக் கொள்கையினை பிரகடனப்படுத்தலினை சனாதிபதியினால் மேற்கொள்ளப்படுகின்றது. |
| (ஆ) | இளைஞர்கள் தொடர்பாக சனாதிபதி ஆணைக்குழு அறிக்கையின் 4 ஆவது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளின் பிரகாரம் தாபிக்கப்பட்ட தேசிய கல்வி ஆணைக்குழுவினால் தேசிய கல்வி கொள்கைக்கான பத்து வருட திட்டத்தினை தயாரிக்கப்பட வேண்டி இருந்த போதிலும், அத்திட்டத்தினை தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | தேசிய கல்வி கொள்கையினை கட்டியெழுப்பல் மற்றும் பிரகடனப் படுத்தலுக்காக பொருத்தமான கால சட்டம் ஒன்றினை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியமை. | இணங்குகின்றேன். ஆணைக்குழுவின் காலஎல்லை 5 வருடம் ஆகும். அவ்வாறு நியமிக்கப்படுகின்ற ஆணைக்குழுவினால் தயாரிக்கப்படும் கொள்கைப் பிரகடனம் தடவைக்குத் தடவை சனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்படுகின்றது. தற்போது தேசிய கல்வி கொள்கைக்கான திட்டம் வகுக்கப்பட்டு வருகின்றது. |

## 3.2 எதிர்பார்த்த இலக்கினை பெற்றுக்கொள்ளாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | தேசிய தொழிற்தகைமை 5 மற்றும் 6 மட்டத்தின் கீழான டிப்ளோமாதாரர்களை அரச மற்றும் தனியார் துறையின் கீழ் வேலைக்கமர்த்துவது தொடர்பான பரீட்சிப்பு அறிக்கையினை தயாரிப்பதற்காக ரூபா 400,000 ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், இறுதி பரீட்சிப்பு அறிக்கையினை வெளியிடப்பட்டிருக்க வில்லலை. | திட்டமிட்டவாறு செயற்பட வேண்டியமை. | பணிக் குழாமினது பற்றாக்குறையினால் தாமதப்படுத்தப்பட்ட இப்பணியினை 2020 வருட நடைமுறை திட்டத்தினுள் உள்வாங்கப்பட்டு செயற்படுத்துவதற்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | சாதாரண கல்வி தொடர்பான தேசிய கொள்கையினை மீள் மதிப்பீடு செய்வதற்காக ரூபா 1,800,000 ஒதுக்கீடு இருந்த போதிலும், பாடசாலை முறைமையின் அமைப்பினை மற்றும் விசேட மற்றும் முறைசாரா கல்வி தொடர்பாக மீள்மதிப்பிடுவதற்கான பரிந்துரையினை அபிவிருத்தி செய்வதனை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | - மேற்படி - | இணங்குகின்றேன். பணிக் குழுமத்தின் பற்றாக்குறையினால் இப்பணி முடிக்கப்படாதிருந்த போதிலும் புது ஆட்சேர்ப்பின் பின்னர் இந்த பணியினை முடிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. |
| (இ) | 13 ஆவது அரசியல் யாப்பு திருத்தத்தின் கீழ் கல்வி தொடர்பான அதிகாரத்தினை மாகாண சபைகளுக்கு பன்முகப்படுத்தல் தொடர்பாக 24 செயற்பாடுகள் தொடர்பாக மீள் கற்கைக்காக ரூபா 1,500,000 | - மேற்படி - | ஆரம்பக் கற்கையினை மேற்கொள்ளப் பட்டிருப்பதுடன் தகுதியானநிபுணத்துவம் உள்ள வளவாளர் ஒருவரை கண்டுபிடிக்க முடியாது போனமையினால் இக்கற்கையினை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதுடன், |

| | | |
|---|---|---|
| ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதன் நிதி முன்னேற்றம் நூற்றுக்கு 8.7 மாத்திரமாக இருந்தது. | | எவ்வாறாயினும், இது அரசியல் யாப்புடன் தொடர்புடைய விடயமாதலால் இது தொடர்பாக மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளாமல் இருப்பதற்கு புது ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டது. |

## 4. பேண்தகு அபிவிருத்திக்கான குறிக்கோளினை அடைந்து கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | ஆணைக்குழுவின் கருத்துரைகள் |
|---|---|---|
| பேண்தகு அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் வருடத்திற்கான நிகழ்ச்சி நிரல் தொடர்பாக நிறுவனம் அறிந்திருந்த போதிலும், நிறுவனத்துடன் தொடர்புபடுத்தக் கூடிய பேண்தகு அபிவிருத்தி இலக்கு மற்றும் குறிக்கோள், அவ்விலக்கினை அடைய வேண்டிய தொடர்புடைய இடங்களையும் இலக்கு மீது அடைவதனை அளந்து பார்க்க கூடியவரை படங்களும் இனங்காண்பதற்காக செயற்பட்டிருக்கவில்லை. | பேண்தகு அபிவிருத்தி இலக்கு மற்றும் குறிக்கோள், அவ்விலக்கினை அடைய வேண்டிய இணைப்பு இடங்கள் மற்றும் அடைவதனை அளப்பதற்கான வரை படங்களையும் இனங்காண்பதற்கு செயற்பட வேண்டியமை. | ஏற்கனவே கல்விக்கான கொள்கை வகுத்தல் செயற்பாட்டில் இப் பேண்மிகு இலக்கு மற்றும் குறிக்கோளினை கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இது பற்றி சம்பந்தப்பட்ட அறிக்கைகளில் கட்டாயமாக குறிப்பிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

## 5. மனிதவள முகாமைத்துவம்

### 5.1 அங்கீகரிக்கப்பட்ட பணிக்குழாம், உண்மையான பணிக்குழாம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | ஆணைக்குழுவின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) கணக்காளர் பதவிக்கு நிரந்தர அடிப்படையிலான அதிகாரியொருவரை நியமிக்கப்படாமல் கல்வி அமைச்சின் கணக்காளர் (உள்ளக கணக்காளர்) வேலை பார்க்கும் அடிப்படையின் கீழ் நியமிக்கப்பட்டிருந்தது. | கணக்காளர் பதவிக்காக நிரந்தர அதிகாரி ஒருவரை நியமிக்கப்பட வேண்டியமை. | வெற்றிடங்களை நிரப்புவதற்கான செயற்பாட்டின் முதற் கட்டம் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் கணக்காளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு இரண்டாம் கட்டத்தில் நிறைவேற்றிக் கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அங்கீகரிக்கப்பட்ட சிரேஷ்ட கொள்கைக்கான பரிசோதனை உத்தியோகத்தர் களுக்கான இரண்டு பதவிகள் உட்பட 8 பதவிகளுக்கான 17 வெற்றிடங்கள் இருந்தன. | அத்தியாவசிய வெற்றிடங்களை நிரப்புதல் அல்லது தற்போதைய பதவிகளை மீண்டும் மீளாய்வு செய்ய வேண்டியமை. | ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டள்ளன. |